Tamil Poems recital 2 ( 7 & 8 years ;  Level 1 & 2)

## ***இன்பத் தமிழ்***

*தமிழுக்கும் அமுதென்று பேர் ! -- அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !*
*தமிழுக்கு நிலவென்றுபேர்! -- இன்பத்*
*தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர் !*
*தமிழுக்கு மணமென்று பேர் ! -- இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !*
*தமிழுக்கு மதுவென்று பேர்! -- இன்பத்*
*தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர் !*

*தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! -- இன்பத்*
*தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல் !*
*தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! -- இன்பத்*
*தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் !*
*தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! -- இன்பத்*
*தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள் !*
*தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! -- இன்பத்*
*தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ*